<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 559/2022 நாள்: 10.11.2025 வா.சா.3 – கணேசன்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

வாதியை எனக்கு 30 ஆண்டுகளாக தெரியும். கிரைய ஒப்பந்தம் ஒரு வருட காலத்திற்கு ஏற்படுத்தப்பட்டது. கிரைய ஒப்பந்த காலக்கெடுவிற்குள் வாதி கிரையம் முடிக்காவிட்டால், முன்தொகையை இலக்க நேரிடும் என்று கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் போடப்படும் காலத்திலேயே தாவா சொத்து Shriram Finance நிறுவனத்தில் அடமானம் வைக்கப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியும். Shriram Finance ல் உள்ள கடனை தீர்ப்பதற்காக தான், பிரதிவாதி வாதியிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கினார் என்றால் சாட்சி கிரைய ஒப்பந்தத்திற்காக தான் முன் தொகையாக பிரதிவாதி ரூ.1 லட்சம் ரொக்கமாகவும், ரூ.4 லட்சம் காசோலையாகவும் பிரதிவாதி வாங்கினார் என்று கூறுகிறார். நான் வாதிக்கு மிகவும் வேண்டப்படுபவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் ஏற்கனவே நான் வருவதற்கு முன்பாகவே ஏற்பாடு செய்து வைத்திருந்தார்கள், பொள்ளாச்சியில் குணசேகரன் அலுவலகத்திற்கு சென்று வாதி, பிரதிவாதிகளிடம் கையொப்பம் வாங்கினார்கள். நானும், குணசேகரனும் சாட்சி கையொப்பம் போட்டோம். கிரைய ஒப்பந்த

ஆவணத்தை யார் தயார் செய்தார்கள், ஆவண எழுத்தர் யார் என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தை படித்து பார்த்து தான் நான் சாட்சி கையொப்பம் போட்டேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.10 16:36:52 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.